# தேசியம்
THESIYAM ජේසියම්

www.thesiyamnews.com

சிறந்ததில் மிகச்சிறந்தது
OFFSET | DIGITAL | SCREEN PRINTING | CTCP PLATE MAKING | WEDDING CARDS
MATHI COLOURS
NO. 10, MURUGESAR LANE,
NALLUR, JAFFNA.
TEL : 021 222 9285
E-mail : mathicolours@gmail.com
CUSTOMER CARE
+94 77 722 2259

குரல் - 48 | 07.05.2023 (ஞாயிற்றுக்கிழமை) | வைகாசி மாதம் | பக்கங்கள் 6 | ஊக்குவிப்பு : ரூ.30.00

## ஜனாதிபதியுடனான பேச்சுவார்த்தையில் த.தே.கூ எம்.பிகள் கலந்து கொள்ளமாட்டார்கள் ரணிலின் அழைப்பு நிராகரிப்பு..??



பக்கம் 5

## சூடுபிடிக்கும் தையிட்டி விவகாரம்! பொய் கூறி சிக்கிய சுகாஷ்!

### உங்கள் அரசியலுக்காக எங்களை பொய்யர்கள் ஆக்காதீர்கள்

### தையிட்டி காணி உரிமையாளர் விசனம்!!

தையிட்டி விகாரைக்கு அருகில் உள்ள காணிகளை இராணுவத்தினரிடம் இருந்து விடுவித்து தம்மிடம் தர கோரி 2021ஆம் ஆண்டு நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரனிடம் ஒப்படைத்த கடிதம் போலியானது அல்ல என கடிதம் எழுதி கையெழுத்து வைத்தவர்களில் ஒருவரான பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

பக்கம் 5

## இன முரண்பாடு பேரினவாதத்தை தூண்டுவது சிறிலங்கா இராணுவமே!

### அங்கஜன் பகிரங்க கருத்து!



பக்கம் 5

சிறிலங்காவில் எந்த தரப்பினர் ஆட்சிக்கு வந்தாலும் சிறிலங்கா இராணுவத்தின் கருத்துக்களுக்கு செவிசாய்க்க வேண்டிய தேவை உள்ளது.

ஆகவே தற்போது இன முரண்பாடு, முறுகல் மற்றும் பேரினவாதம் என்பவற்றை சிறிலங்கா இராணுவமே தூண்டுகின்றது என சிறிலங்கா சுதந்திர

## தொடரும் சிங்களத்தின் ஆக்கிரமிப்புக்கள்.!

### வலிகாமம் வடக்கு வசாவிளானில் மக்களின் காணியில் இராணுவ வைத்தியசாலை

யாழ்.வலி.வடக்கு - வசாவிளான் பகுதியில் பொதுமக்களுக்கு சொந்தமான காணியில் இராணுவ வைத்தியசாலை அமைக்கப்படுவருவதாகவும், அதற்காக எந்தவொரு அனுமதியும் பெறப்படவில்லை எனவும் வலி.வடக்கு முன்னாள் உறுப்பினர் ச.சஜீவன் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், வலி வடக்கு தையிட்டியில் விகாரை அமைக்கப் பட்டுவருவது தொடர்பில் பிரதேசசபைக் கூட்டத்தில் கலந்துரையாடி அதனை நிறுத்த வேண்டும் என பிரேரணை நிறைவேற்றப்பட்டது. அதேபோல் வசாவிளான் பகுதியில் 245 கிராம சேவையாளர் பிரிவில் இராணுவ வைத்தியசாலை கட்டப் பட்டு வருகின்றது. இதில் 8 குடும்பங்களை சேர்ந்த பொது மக்களின் காணிகள் உள்ளடக்கப்பட்டுள்ளது.



பக்கம் 5

## மக்களை ஏமாற்றும் அரசியலில் ஈடுபடுவோருக்கு விரைவில் முற்றுப்புள்ளி

### ரெலொ சுரேந்திரன்



பக்கம் 5

யாழ்ப்பாண தமிழ் மக்களை இனியும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் ஏமாற்ற முடியாது என ரெலொவின் பேச்சாளர் குருசாமி சுரேந்திரன் தெரிவித்தார்.

ரெலோ இயக்கத்தின் தலைவர் சிறிசபாரத்தினம் அவர்களின் 37 வது ஆண்டு நிறைவு தின நிகழ்வில் கலந்து

## யாழ்.கந்தரோடையில் புதிதாக விகாரை : இன்று எதிர்ப்பு போராட்டம்

யாழ்.சுன்னாகம் - கந்தரோடை பகுதியில் திட்டமிட்ட சிங்கள பௌத்த மயமாக்கலை கண்டித்து இன்று பாரிய மக்கள் போராட்டம் ஒன்றை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதனை கண்டித்து வலிகாமம் தமிழ்த் தேசியப் பேரவை பல அமைப்புகளுடன் இணைந்து இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கவனயீர்ப்பு போராட்டம்

பக்கம் 5

## வடக்குக்கிழக்கைத் தனித்தனியாகக் கையாளும் ரணிலின் தந்திரத்துக்குப் பலியாக வேண்டாம்:

### பொ. ஐங்கரநேசன் வேண்டுகோள்!!



பக்கம் 5

இனப்பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காண்பேன் என்று கூறி வருகின்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதற்கான பேச்சுவார்த்தைகளுக்கு அழைப்பு விடுத்திருக்கிறார். முதற்கட்டமாகத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் மே 09ஆம் திகதி பேசவுள்ள ஜனாதிபதி, மே 11, 12,

## வெடுக்குநாறி மலை ஆலயத்தை உடைத்தது தமிழ் எம்.பிக்கள்!

### காரணத்தை வெளியிட்ட அமைச்சர்



பக்கம் 3

யாழ்ப்பாணம் - தையிட்டி விகாரை விவகாரத்தை அரசியலாக்க வேண்டாம் என்று புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார். தையிட்டி விகாரை விவகாரம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். மேலும் கூறுகையில், "வடக்கு மற்றும் கிழக்கில் இவ்வாறான பிரச்சினைகள் தொடர்ந்தும் ஏற்படுகின்றன. இதற்கான அடிப்படை காரணம் என்ன என்பது எமக்கு தெரியவில்லை. அரசியல் வாதிகள் தமக்கான வாக்குகளை

தேசியம் www.thesiyamnews.com THESIYAM ජේසියම්
ஆசிரியர் பீடம்
தொலைபேசி : +94 76 567 3339
மின்னஞ்சல் : thesiyamnews@gmail.com
இணையம் : www.thesiyamnews.com



## இதனை செய்ய முன்வருவாரா ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க...?

**"நாம் முன்னோக்கி பயணிக்க வேண்டுமாயின் இனப்பிரச்சனைக்கு தீர்வு காண வேண்டும். இது தொடர்பில் பேச்சு நடத்தி வருகின்றோம். இது குறித்து இவ் வருட இறுதிக்குள் இணக்கப்பாட்டிற்கு வருவதற்கு எதிர்பார்த்துள்ளேன். யாருக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் பெரும்பான்மை சிங்கள மக்களையும் சிறுபான்மை தமிழ் முஸ்லிம் மக்களையும் பாதுகாத்து முன்னோக்கி செல்ல வேண்டும். இதற்காக நாம் அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். இனப்பிரச்சனை விடயத்தில் தூரச்செல்வதால் எந்த பயனும் இல்லை என்று நான் தமிழ் கட்சிகளிடம் கூறுகின்றேன். இந்த நாட்டில் உள்ள தமிழ் மக்களின் பிரச்சனைகளை தீர்க்க வேண்டுமாயின் தயவுசெய்து இந்த பொறிமுறைக்குள் வந்து, விசேடமாக, பாராளுமன்றத்தில் நாம் அனைவரும் அரசாங்கமாக இணைந்து செயற்பட முன்வரவேண்டும்."**

கொழும்பில் நிகழ்ந்த ஐக்கிய தேசிய கட்சியின் மேதினக் கூட்டத்தில் சூம் எனப்படும் மெய்நிகர் வழியாக உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கும் ஒரு முக்கியமான கருத்துத் தான் இது!

"மேலும், இனப்பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கான உடன்பாடு, இந்த ஆண்டு எட்டப்படும் என்று எதிர்பார்க்கின்றேன்" என்றும் ஜனாதிபதி தனது பேச்சில் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் இந்த கருத்துக்கள் சுட்டிக்காட்டும் விடயம் தான் என்ன?

ஒரே வரியில் சொல்வதானால், தமிழ் முஸ்லிம் கட்சிகளையும் இணைத்துக் கொண்டு, சாத்தியமான அளவில், பரந்த அடிப்படையில் தேசிய அரசாங்கம் ஒன்றை நிறுவுவதற்கு அவர் முயற்சிக்கின்றார் என்றுதான் கருதவேண்டும் - கருதமுடியும். இந்த தேசிய அரசாங்க சிந்தனை ஜனாதிபதிக்கு ஓர் புதிய விடயம் அல்ல! பதவியேற்ற பின்னர், ஒருசில தடவைகள் அவர் இதனை திட்டவட்டமாக குறிப்பிட்டது பலருக்கும் ஞாபகம் இருக்கும்.

அடுத்த ஜனாதிபதி தேர்தலை 2024ம் ஆண்டு முடிவடைவதற்குள் நடாத்தி, மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட ஓர் ஜனாதிபதியாக வரலாற்றில் இடம் பிடிப்பற்கு அவர் திட்டமிடுவது ஒன்றும் ஆச்சரியத்துக்குரியது அல்ல. 1999 மற்றும் 2005 என அடுத்தடுத்து நிகழ்ந்த ஜனாதிபதி தேர்தல்களில், இரண்டு தீர்க்கமான காரணங்களினால் தோல்வியை தழுவியவர் ரணில் விக்கிரமசிங்க.

1999 ஜனாதிபதி தேர்தலில், பிரசாரத்துக்கான இறுதி நாளில், அன்றைய ஜனாதிபதி சந்திரிகாவை குறி வைத்து, தமிழீழ விடுலைப் புலிகள் மேற்கொண்ட தற்கொலைத் தாக்குதலில் மயிரிழையில் அவர் உயிர் தப்பிய போது, ரணில் விக்கிரமசிங்கவின் ஜனாதிபதிக் கனவு உடைந்து சிதறியது!

மீண்டும் 2005ல், அவர் ஜனாதிபதி தேர்தலில் பிரகாசமான வெற்றிவாய்ப்போடு களத்தில் நின்ற வேளையில், விடுதலைப்புலிகள் அறிவித்த தேர்தல் பகிஷ்கரிப்பு, வடகிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்களின் வாக்குகளை வீணாக்கி, கைக்கெட்டிய தூரத்தில் இருந்த அவரது வெற்றியை தூரத்துக் கனவாக தொலைந்துபோக வைத்தது!

ஆனாலும், அரசியலில் எதுவும், எப்படியும் நிகழலாம் என்ற எழுதப்படாத விதியை நிரூபிக்கும் விதத்தில், கடந்த ஆண்டு பாராளுமன்ற வாக்கெடுப்பில் வெற்றி பெற்று ஜனாதிபதி கதிரையில் ரணில் அமர்ந்து கொண்டார். இந்த அரசியல் ஆச்சரியத்தின் கதாநாயகன், நேரடித் தேர்தல் மூலம் மீண்டும் ஜனாதிபதி ஆகிவிட இப்போது துடிப்பதை புரிந்து கொள்ள முடியும். அதே நேரத்தில், இந்த இலக்கை அடைவதற்கு ரணில் கையாளும் அரசியல் யுக்தி, ஓர் அபாரமான அரசியல் இரா ஜதந்திரம் என்பதையும் ஏற்றுக்கொண்டே ஆக வேண்டும். ஆயினும்,இவை எல்லாம், நீண்டகால அரசியல் அனுபவம் கொண்ட ஓர் அரசியற் தலைவரின் தனிப்பட்ட அபிலாசைகளை மையமாகக் கொண்ட நிகழ்ச்சி நிரல் மட்டுமே!

இந்த நிகழ்ச்சி நிரலின் அடிப்படையிலேயே தமிழ்க் கட்சிகளுக்கு இப்பொழுது ரணில் வலை விரிக்கின்றார். ஆனால், தமிழ்த் தேசியத்தை முன்னெடுத்திருக்கும் எந்தவொரு தமிழ்க் கட்சியும் இந்த வலைக்குள் சிக்கமாட்டாது என்று அடித்துக் கூற முடியும்.

அமைச்சுப் பதவியை ஏற்று கொள்வது பற்றி, சமீபகாலத்தில் இரண்டு தடவைகளுக்கு குறையாமல், பகிரங்கமாக பிரஸ்தாபித்த முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரனின் கட்சியும் இதில் அடங்கும் - அடங்கியே ஆக வேண்டும். தமிழ் மாநிலத்தின் அரசியல் யதார்த்தம் அதனை நிர்ப்பந்திக்கின்றது.

தமிழ் மக்களின் இருப்பையும் தனித்துவத்தையும் சவாலுக்கு உள்ளாக்கும் விதத்தில், அரசாங்கத்தின் உறுப்புக்களான தொல்லியல் துறையும், வனத்துறையும், வனஜீவராசிகள் துறையும் ஒரு புறமாகவும், அகிம்சையை போதிக்கும் புத்த மதத்தின் பிரதிநிதிகளாக தம்மை பிரகடனம் செய்து கொண்டு, இந்து ஆலயங்களை துவம்சம் செய்யும் விதத்தில், அராஜக வழியில் செயற்படும் பௌத்த பிக்குகள் பலர் மறுபுறமாகவும், தமிழர் தாயகத்தில் பௌத்த சிங்கள பேரினவாத ஈட்டிகளை அடிக்கடி பாய்ச்சி வருகின்ற நிலைமை நீடித்து நிற்கையில், படைத்துறையின் பாதுகாப்போடு புத்தரின் சிலைகள் முளைப்பதும், விகாரைகள் தோன்றுவதும் தொடர்கதையாகி விட்டிருக்கையில், ஜனாதிபதியின் இனப்பிரச்சனை தீர்வுப் பேச்சும் தேசிய அரசாங்கம் பற்றிய முன்மொழிவும் வெறும் அலங்கார வார்த்தைகளாகவே தமிழ் மக்களால் பார்க்கப்படும்.

தமிழை தாய்மொழியாகக் கொண்ட முஸ்லிம் மக்களில் பெரும்பாலானோர் கூட, இதே மனநிலையில் தான் இன்று உள்ளனர்.

சிறுபான்மை சமூகங்கள் எனக் கூறப்படும் தமிழ், முஸ்லிம் இனங்களை பௌத்த சிங்கள பேரினவாதம், துன்புறுத்துவதிலும் தொல்லை கொடுப்பதிலும், தடையேதுமின்றி தொடர்ந்து ஈடுபட்டு நிற்கையில், தனது எந்தவொரு அரசியல் அறிவிப்பும் அழைப்பும், சிறுபான்மை மக்களால், குறிப்பாக தமிழ் மக்களால் வரவேற்கப்பட வேண்டும் என ஜனாதிபதி விரும்புகின்றார் என்றால், அவர் முதலில் ஓர் விடயத்தை செய்தாக வேண்டும்.

தமிழ் மாநிலத்தில் வாழும் தமிழ் முஸ்லிம் மக்கள் அரசாங்க அதிகாரத்தின் அப்பட்டமான துஷ்பிரயோகத்தின் துணையோடு, தொடர்ந்து அரங்கேற்றப்பட்டு வரும் சிங்கள பௌத்த பேரினவாத அடாவடித்தனத்துக்கு ஆளாக்கப்பட்டு வரும் அக்கிரம சூழ்நிலைக்கு உடனடியாக முற்றுப் புள்ளி வைத்திட, அவர் தனது முழு அதிகாரத்தையும் பிரயோகிக்க முன்வர வேண்டும்.

தமிழை தாய் மொழியாக கொண்ட மக்கள் என்ற காரணத்திற்காக, தமிழ் மாநிலத்தில் தமிழ் பேசும் மக்கள் அனுபவிக்கும் துன்ப துயரங்களை தடுத்து நிறுத்தவும், துடைத்தெறியவும், மனச்சாட்சியின் அடிப்படையில் அவர் உடனடியாக முன்வரவேண்டும்.

சுருக்கமாக சொல்வதானால், தனது நம்பகத்தன்மையை அதாவது, நம்பகத்தகுந்த மனிதர், தான் என்பதை அவர் முதலில் நிரூபிக்க வேண்டும்.

அதனை முதலில் செய்துவிட்டு, இனப்பிரச்சனைத் தீர்வு பற்றியும், தேசிய அரசாங்கம் பற்றியும் அவர் தாராளமாக தொடர்ந்து பேசலாம். தூரச்செல்ல வேண்டாம் என தமிழ் கட்சிகளையும் அவர் கோரலாம்.

**இதனை செய்ய முன்வருவாரா ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க...?**

ஆசிரியர்

## யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி வளாகம் தனி பல்கலைக்கழகமாக தரமுயர்த்தப்படும்

## டக்ளஸ் தேவானந்தா உறுதி!



யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி வளாகம் தனி பல்கலைக்கழகமாக தரமுயர்த்தப்படும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி பொன்னகர் கிராமத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் இந்தியன் வீட்டுத்திட்டத்தில் ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பிலான வடயங்கள் பற்றி பேசும்போதே அவர் இவ்விடயத்தை தெரிவித்தார்.

குறித்த வளாகம் புலிகளின் பயன்பாட்டில் இருந்த நிலையில் இராணுவம் கிளிநொச்சியை விடுவித்த பின்னர் தமது முகாமாக மாற்றிக்கொண்டனர். அதன் பின்னர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுடன் கதைத்து அதனை பல்கலைக் கழகத்திற்கு பெற்றுக்கொடுத்துள்ளோம்.

அங்கு நான்கைந்து வளாகங்கள் வந்துள்ளது. கிளிநொச்சி வளாகத்தை கிளிநொச்சி பல்கலைக் கழகமாக மாற்றித் தருவோம் என அவர் இதன் போது தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

குறித்த பாதிப்புக்கள் ஒப்பந்தங்கள் செய்யப்படும் போது ஏற்படுகின்றது. அதில் நாங்கள் கவனமாக இருக்க வேண்டும் அவை நடந்து முடிந்து விட்டது. இந்திய தூதரகம்தான் ஒப்பந்தகாரர்களிற்கு அதனை கொடுத்திருக்கும். உடைந்த வீடுகள் தொடர்பான படங்கள் தந்தால் அதனை இந்திய தூதரகத்திற்கு அனுப்புவேன்.

அண்மையில் ஜனாதிபதி இந்தியாவிற்கு செல்லவுள்ளார். பிரதமர் மோடிக்கும் அதனை நாங்கள் கொடுக்கலாம். உடனடியாக திருத்தத்திற்கு காசும் தரலாம். உங்களுடைய கோரிக்கைகளில் ஒன்று காணியுமாகும். அந்தந்த பிரதேசத்தில் இருக்கின்றவர்களிற்கே முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்பது எமது நிலைப்பாடு.

அதற்கு மேலாக வேறு பிரதேசத்திற்கு கொடுக்க முடியும். புலிக்குளத்திற்கு அருகில் காணி இருப்பதாக சொல்லப்படுகின்றது. அந்த காணி பல்கலைக்கழகத்திற்குரியது என்றெல்லாம் சொல்லப்படுகின்ற போதிலும் பயன்பாட்டில் இல்லை.

நாட்டின் சூழ்நிலை காரணமாக குறித்த காணியினை விவசாயம் செய்வதற்காக பெற்றுத்தரலாம் என அவர் தெரிவித்தார்.





உள்நாட்டு செய்திகள் - கிளிநொச்சி

# தையிட்டி சட்ட விரோத விகாரையை இடித்தே தீரவேண்டும் என்பதே எமது போராட்டத்தின் நிலைப்பாடு! : காண்டீபன்



தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினர் மக்களுக்குள் இருந்து போராட்டத்தை முன்னெடுக்கும் போது தமிழ்த்தேசிய கட்சிகளாக தம்மைக் காட்டிக்கொள்ளும் கட்சிகள் இந்த போராட்டத்தை சிதைக்கும் வகையில் செயற்பட்டுள்ளது என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்த நடராஜர் காண்டீபன், தமிழரசு கட்சியினர் மீது நேரடியாகவே குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

அது மட்டுமன்றி தையிட்டிப் பகுதி, முன்னர் யாருடைய கோட்டையாக இருந்தது என்றும் எனக்குத் தெரியும், அந்தக் கோட்டையில் இருந்தவர்கள் தங்களுடைய பகுதிகளை விடுவித்து தங்களுக்கான வீடுகளை கட்டி முடிக்கும் வரை நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தார்கள். போராட்டங்களை நடத்தியிருந்தனர்.

இப்போது அவர்களுடைய வீடுகள் அரண்மனை போன்று கட்டப்பட்டதும் போராட்டம் தேவையில்லையென ஒதுங்கி விட்டனர் எனவும் பகிரங்கமாக தமிழரசு கட்சியினர் மீது குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

இவ்வாறான பல பிரச்சினைகளுக்கு மத்தியிலேயே நாங்கள் இன்று மக்களுடன் இணைந்து போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். ஆனாலும் அதற்குள்ளும் நுழைந்து இந்த போராட்டத்தை சிதைக்கும் வகையில் குறித்த கட்சி செயற்படுகின்றது.

இவற்றையெல்லாம் தாண்டி எம்மீதும் போராட்டக்காரர்கள் மீதும் எவ்வாறான விமர்சனங்களை முன்வைத்தாலும் நாம் ஏற்றுக்கொள்ளத் தயாராகவே இருக்கின்றோம். ஆனால் எமக்குரிய உரிமை கிடைக்கும் வரை போராடியே தீருவோம்.

ஏனென்றால் போராடாமல் இருந்தாலும் சாவு தான், போராடினாலும் சாவு தான், ஆகவே போராடிச் சாவோம் என எமது தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் கற்பித்த அந்த வழியில் அவரின் கொள்கையை பின்பற்றி நாம் பயணிப்போம்.

ஆகவே தையிட்டியில் கட்டியுள்ள சட்ட விரோத விகாரையை அகற்றக் கோரி போராடுவதில் என்ன தவறு இருக்கின்றது. சட்ட விரோதம் என்றால் அதனை அகற்றியே தீர வேண்டும். ஏனென்றால் தம்புள்ளையில் எமது இந்து ஆலயமான பிள்ளையார் ஆலயம் இடிக்கப்பட்டது.

ஆகவே சட்ட விரோதமான இந்த விகாரையையும் இடியுங்கள். தமிழரசு கட்சியைச் சேர்ந்தவர்கள் போராட்டக்களத்திற்கு வந்த போது இது தொடர்பில் தாம் வழக்குப் பதிவு செய்திருக்கின்றோம் எனவும் இது தொடர்பில் எமது கவனத்தில் இருக்கின்றது எனவும் தெரிவித்துள்ளனர் எனவும் சுட்டிக்காட்டிருந்தார்.

அதேவேளை இராணுவ அடக்கு முறைகள் காவல்துறை கைதுகள் என பல நெருக்கடியை கடந்து நாம் மக்கள் மத்தியில் செல்கின்றோம். இதையே தான் எமது கட்சியின் செயலாளர் கஜேந்திரன், கைது செய்யப்படுவதாக இருந்தால் அது நானாக இருக்க வேண்டும் எனக் கூறினார் எனவும் தெரிவித்திருந்தார்.

தையிட்டில் அமைக்கப்பட்டுள்ள சட்ட விரோத விகாரையை அகற்றுமாறு கோரி, தமிழத்தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்ட பொதுமக்கள் எனப் பலர் கூடி தொடர்ச்சியாக மூன்று நாட்கள் போராட்டம் முன்னெடுத்திருந்தனர்.

இந்த போராட்டத்தின் இரண்டாவது நாள் தமிழரசு கட்சி தலைவர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களும், சிறிலங்கா சுதந்திர கட்சியை சேர்ந்த அங்கஜன் இராமநாதனும் நேரடியா போராட்டக்களத்திற்கு சென்று தமது ஆதரவையும் தெரிவித்திருந்தனர்.

உள்நாட்டு செய்திகள் - யாழ்ப்பாணம்

# கோட்டா அவமானப்பட்டதை போன்றதொரு நிலையை தடுக்கவே புதிய சட்டமூலம் - சட்டத்தரணி தவராசா



காலிமுகத்திடல் போராட்டத்தை போன்று இன்னொரு போராட்டம் இந்த நாட்டில் இடம்பெறக்கூடாது என்ற காரணத்திற்காகவே ரணில் விக்கிரமசிங்க புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை கொண்டு வருவதாக ஜனாதிபதி சட்டத்தரணி தவராசா சுட்டிக்காட்டியுள்ளார்.

மறைந்த முன்னாள் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரா மற்றும் பிரதமராக ரணில் விக்கிரமசிங்க பதவி வகித்த நல்லாட்சி காலத்தில் பங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படுமென கூறப்பட்டாலும் நீக்கப்படவில்லை. இப்படியான கொடூரமான சட்டம் நீக்கப்பட வேண்டும்.

ஆனால் அந்த பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு பதிலாக பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை கொண்டுவரவுள்ளனர். அது முதலுள்ள சட்டத்தை விட ஆபத்தானது.

நல்லாட்சி கால நீதியமைச்சரே தற்போதும் நீதியமைச்சராக உள்ளார். இந்த சட்ட மூலம் கொண்டுவரப்படும் போது யாரோடும் கலந்துலையாடப்படவில்லை.

இந்த சட்டமூலம் நிறைவேற்றப்படுமாயின் ஒரு விடயத்தை பற்றி பேசினாலும் குற்றம், பேசாவிட்டாலும் குற்றம் என்ற நிலையே காணப்படுகிறது.
ஜனநாயக நாட்டில் அரசியலுரிமையில் உள்ள பேச்சு சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் , நடமாடும் சுதந்திரம் ஆகிய மூன்றும் முற்றுமுழுதாக அந்த விடயங்கள் யாவும் குற்றமாக கருதப்படும்.

அறகலய போராட்டத்தின் பின் இன்னாரு போராட்டம் வரக்கூடாது என்பதற்காகவே ஜனாதிபதி இச் சட்டமூலத்தை கொண்டு வருகின்றார்.

இதேவேளை ஊடக சுதந்திரமும் பறிக்கப்படுகிறது.

இலங்கைக்குள்ளே நடமாட முடியா , வெளிநாடு செல்ல முடியாது போன்ற தடைகளை ஜனாதிபதி விதிக்க முடியுமான வளவு சட்டமூலத்தில் காணப்படுவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு செய்திகள் - யாழ்ப்பாணம்

# தமிழரசு கட்சி அலுவலகத்தில் பாடசாலை மாணவர்களிற்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு!




பாடசாலை மாணவர்களிற்கு பாதணிகள் மற்றும் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு தமிழரசு கட்சி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது. குறித்த நிகழ்வு லண்டன் வோள்தம்ஸ்ரோம் கற்பக விநாயகர் ஆலயத்தின் நிதி பங்களிப்பில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களை உள்ளடக்கி நேற்று பிற்பகல் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன், லண்டன் வோள்தம்ஸ்ரோம் கற்பகவினாயகர் ஆலய அறங்காவலர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். நிகழ்வின் பின்னர் ஊடகங்களிற்கு கருத்து தெரிவித்த சிறிதரன், சரத் வீரசேகர நேற் றைய தினம் வெடுக்குநாறி மலைக்கு படை பட்டாளங்களுடன் சென்றுள்ளமை மீண்டுமொரு இனவாதத்தை கக்கும் செயலாக அமையக்கூடும் என ஊடகங்களிற்கு தெரிவித்தார்.

உள்நாட்டு செய்திகள் - கிளிநொச்சி

## ஜனாதிபதியுடனான பேச்சு...

பெற்றுக்கொள்வதற்காகவே இவ்வாறு செயற்படுகின்றனர்.

வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வர் ஆலய விவகாரத்திலும் இவ்வாறே இடம்பெற்றது. அவர்களாகவே சென்று ஆலயத்தை உடைத்து அதனை நாம் உடைத்ததாகக் குறிப்பிட்டனர்.

இவ்வாறான பிரச்சினைகள் மீண்டும் ஏற்படாமலிருக்க வேண்டுமெனில் அரசியல்வாதிகள் அனைவரையும் இவ்வாறான செயற்பாடுகளிலிருந்து நீக்க வேண்டும். எம்மை இனவாதிகளென கூறுபவர்கள் இறுதியில் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர்.

சட்டங்களினூடாக மதத்தைப் பின்பற்றுவதற்கு மக்களுக்குள்ள சுதந்திரத்தை மட்டுப்படுத்த நாம் விரும்பவில்லை.

இவ்வாறான மத விவகாரங்கள் தொடர்பில் ஏதேனும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமெனில் அமைச்சின் அனுமதி பெறப்பட வேண்டும் என்ற சட்டத்தை அறிமுகப்படுத்தலாம். ஆனால் அனைவரும் மூத்தோர் என்ற அடிப்படையில் எம்மால் ஒழுக்கமாக நடந்து கொள்ள முடியுமல்லவா?

இந்நாட்டில் ஒழுக்கம் இல்லை. குறிப்பாக அரசியல்வாதிகளிடத்தில் ஒழுக்கம் இல்லை. அரசியல்வாதிகளிடம் ஒழுக்கமும், சகிப்புத்தன்மையும் செல்கின்றனர்.

அதனைத் தொடர்ந்து ஏனைய கட்சிகளும் அங்கு செல்கின்றன. வாக்குகளுக்காக அனைவரும் இவ்வாறு செயற்படுகின்றனர்.

மாறாக மக்கள் இவ்வாறான விடயங்களில் கவனம் செலுத்துவதில்லை. இவை அரசியல் விளையாட்டுக்கள் என்பதை மக்கள் புரிந்து கொண்டுள்ளனர்.அதன் காரணமாகவே அம் மக்கள் இவர்களுக்கு வாக்களிப்பதில்லை.

எனவே அரசியல்வாதிகளிடம் ஒழுக்கம் காணப்பட்டால், ஏனையோருக்கிடையிலும் சகிப்புத் தன்மையை உருவாக்க முடியும். இவை இந்து மற்றும் பௌத்தவாதங்களின் அடிப்படையாகும்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்த இவ்வாறான பிரச்சினைகள் இடம்பெறும் இடத்துக்குச் சென்றால், தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஒரு பிரிவினரும் அங்கு மதத்தை அடிப்படையாகக் கொண்டு அரசியல் விளையாட்டுக்களை விளையாட வேண்டாமென அரசியல்வாதிகளிடம் கேட்டுக் கொள்கின்றேன்.

தையிட்டி விவகாரம் தொடர்பில் அடுத்த வாரம் அறிக்கை கிடைக்கப்பெறும். அதனை அடிப்படையாகக் கொண்டு தீர்மானம் எடுக்கப்படும். உண்மைகளை அறியாமல் என்னால் எதனையும் கூற முடியாது."என கூறியுள்ளார்.

CREATIVE DESIGNER
every design has a story
Logos | Flyers | Banners |
Name Boards | Brochures |
Catalogue | Magazines |
News Papers | Product Packaging |
Social Media Ads | Badges |
Menu | Posters | Vouchers
+94 77 3828 594

# யாழ். கதிர்காம பாதயாத்திரை யாழ். சந்நதியில் ஆரம்பம்!

## ஜெயாவேல்சாமி தலைமையில் 43தினங்கள் 815கி.மீ. நடைப்பயணம்



இந்துக்களின் பாரம்பரிய கதிர்காமத் திற்கான பாதயாத்திரை வழமை போல இம்முறையும் யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தி லிருந்து ஜெயாவேல்சாமி தலைமை யில் நேற்று 06ஆம் திகதி சனிக் கிழமை விசேட பூஜையுடன் ஆரம் பமாகியுள்ளது.

காலை 7.30 மணியளவில் செல் வச் சந்நிதி முருகன் ஆலயத்தி லிருந்து விசேட பூஜையுடன் அரோ ஹரா கோஷம் விண்ணைப் பிளக்க ஆரம்பமானது. யாத்திரீகர்களின் உறவினர்களும் வந்து ஆரத் தழுவி கண்ணீர் மல்க வழியனுப்பி வைத் தனர்.

பாதயாத்திரை தொடர்பான பதாகை கள் யாழ்ப்பாணம் செல்வச் சந்நிதி முருகன் ஆலய வளாகத்தில் கட்டப் பட்டிருந்தன.

கதிர்காமத்தில் கன்னிக்கால் நட்ட நேற்றைய தினம் இப் பாதயாத்திரை ஆரம்பமாகிறது.

வடக்கு கிழக்கு ஊவா ஆகிய 3 மாகாணங்களையும் யாழ்ப்பாணம் கிளிநொச்சி முல்லைத்தீவு திரு கோணமலை மட்டக்களப்பு அம் பாறை மொனராகல 7மாவட்டங் களையும் இணைத்து 55நாட்களில் 98ஆலயங்களைத்தரிசித்து 815 கிலோமீற்றர் தூரத்தை நடந்துகடக் கும் இப் புனித பாதயாத்திரை இலங் கையின் மிகமிகநீண்ட தூர கதிர் காமபாதயாத்திரையாககருதப்படுகி ன்றது.

ஆனால் இம்முறை கதிர்காமம் ஆடி வேல்விழா உற்சவ காலம் ஒருமாத காலம் முன்கூட்டியே அறிவித்ததால் பாதயாத்திரை காலத்தை 43 நாட் களாக சுருக்க வேண்டி நேரிட்டது. கடந்த 23வருடங்களாக சைவமரபு பாரம்பரியத்துடன் இடம்பெற்று வரும் இப் பாதயாத்திரை கதிர்காமக் கந்தனாலய கொடியேற்றத்தினத் தில் கதிர்காமத்தைச் சென்றடைவது வழமையாகும்.

சந்நதியில் நேற்று 06ஆம் திகதி காலை நடைபெற்ற விசேடபூஜையி னைத் தொடர்ந்து மோகன்சுவாமி யால் வேலாயுதமானது கதிர்காம பாதயாத்திரைக் குழுத்தலைவர் ஜெயாவேல்சாமியிடம் சம்பிரதாய பூர்வமாக ஒப்படைக்கப்பட்டது..

தொடர்ந்து பாதயாத்திரை வற்றாப் பளை கண்ணகை அம்மனாலய த்தை அடைந்து பின்னர் அங்கிரு ந்து ஜெயாவேல்சாமி அணியில் வழ மையாக பயணிக்கும் நூறுபக்தர் களுடன் மீண்டும் பாதயாத்திரை இடம்பெறும்.

பாதயாத்திரைக்கான சகல அனுமதி களும் வழமைபோல பெறப்பட்டிருப் பதாக பாதயாத்திரைக்குழுத்தலை வர் ஜெயாவேல்சாமி தெரிவித்தார்.

உள்நாட்டு செய்திகள் - யாழ்ப்பாணம்

# "இலங்கை முஸ்லிம்களின் தேசிய பங்களிப்பு"

## நூல் அறிமுக விழா.!



பன்னூலாசிரியர் கலாநிதி ரவூப் ஸெய்ன் எழுதிய "இலங்கை முஸ் லிம்களின் தேசிய பங்களிப்பு" எனும் நூலின் அறிமுக விழாவும் விசேட உரையும் நேற்று (06) சனிக்கிழமை மாளிகைக்காடு பாவா ரோயலி வரவேற்பு மண்டபத்தில் மட்டக்களப்பு தேசிய கல்வியற் கல் லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்ஷெய்க் அன்ஸார் பழீல் மௌலானா தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவில், அம்பாறை மாவட்ட நாபிதத்துன் நளீமியின் தலை வரும் அம்பாறை, சிரேஷ்ட சுற்றாடல் உத்தியோகத்தருமான அஷ் ஷெய்க் எம்.ஐ.எம். இஸ்ஹாக் நளீமி வரவேற்புரையையும் அறி முக உரையையும் நிகழ்த்தியதோடு, இலங்கை தென்கிழக்குப் பல் கலைக்கழகத்தின் தமிழ்த்துறை சிரேஷ்ட பேராசிரியர் எம். றமீஸ் அப்துல்லாஹ் நூல் பற்றிய அறிமுகத்தையும் "இலங்கை முஸ்லிம்க ளின் தேசிய பங்களிப்பு" எனும் தலைப்பில் கலாநிதி ரவூப் ஸெய்ன் விசேட உரையையும் நிகழ்த்தினர்.


இந்நிகழ்வில் உலமாக்கள், அம்பாறை மாவட்ட ஜம்மியதுல் உலமா சபை தலைவர் அஷ்ஷெய்க் மௌலவி எஸ்.எச். ஆதம் பாவா, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பா ளர் டாக்டர் எம்.பி. அப்துல் வாஜித், சம்மாந்துறை பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளர் எந்திரி எம்.பி.எம். நவாஸ், பல்வேறு வைத்திய சாலைகளின் வைத்திய அதிகாரிகள், கல்விமான்கள், அரசியல் பிர முகர்கள், துறைசார் பிரமுகர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், எழுத்தா ளர்கள், சிவில் சமூக அமைப்புக்களின் பிரதானிகள், ஊடகவிய லாளர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

அம்பாறை மாவட்ட நாபிதத்துன் நளீமியின் செயலாளரும் கலாசார உத்தியோகத்தருமான அஷ்ஷெய்க் ஏ.ஏ.ஏ. அஸீம் நளீமி நன்றி யுரை நிகழ்த்துவதோடு, நிகழ்ச்சி தொகுப்பை அஷ்ஷெய்க் றாபி எம். மப்றாஸ் நளீமி செய்தார்.

உள்நாட்டு செய்திகள் - அம்பாறை

# குளத்து நீரேந்து பிரதேசத்தை கைப்படுத்தி விடுமுறை நாட்களில் வேலி அடைப்பு:

## வவுனியா பொலிஸில் கமநல அபிவிருத்தி திணைக்களம் முறைப்பாடு



வவுனியாவில் குளத்து நீரேந்து பிர தேசத்தை கையகப்படுத்தி தொடர்ந் தும் விடுமுறை நாட்களிலும், இரவு வேளைகளிலும் வேலி அடைக்கப் பட்டு வரும் நிலையில் கமநல அபி விருத்தி திணைக்களத்தால் வவு னியா பொலிசில் முறைப்பாடு செய் யப்பட்டுள்ளது.

வவுனியா கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் கீழான பட்டா ணிச்சூர் புளியங்குளத்தின் குரமன் காட்டுக்கு அண்மித்த மன்னார் வீதி ஓரமாகவுள்ள நீரேந்து பிரதேசத்தை ஆக்கிரமித்து குறித்த சில நபர்களால் கம்பி கட்டை போடப்பட்டு கடந்த 30 ஆம் திகதி வேலி அடைக்கப்பட்டிருந் தது. இது தொடர்பில் கமநல அபி விருத்தி திணைக்களத்தின் கவன த்திற்கு சென்றதையடுத்து குறித்த வேலைகள் நிறுத்தப்பட்டிருந்தன.

வெசாக் தினத்தை முன்னிட்டு அரச திணைக்களங்களுக்கு விடுமுறை விட்டுள்ள நிலையில் நேற்று (06) மாலை முதல் இரவிரவாக குறித்த பகுதியில் மேலும் குளத்து நீரேந்து பிரதேச நிலத்தை கையகப்படுத்தி வேலி அடைக்கப்பட்டு வந்துள்ளது. இதனையடுத்து குறித்த விடயம் தொடர்பில் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் கவனத்திற்கு விவசாய அமைப்புக்கள் கொண்டு சென்றதையடுத்து, அரச நிலத்தை அத்து மீறி கையகப்படுத்தி வேலி அடைத்தமைக்கு எதிராக கமநல அபிவிருத்தி திணைக்களத்தால் வவுனியா பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த சமட்பவம் தொடர்பில் வவுனியா பொலிசார் விசாரணைகளை முன்னெடுத் துள்ளனர். குறித்த நீரேந்து பகுதி யில் உள்ள பள்ளிவாசல் ஒன்றினை அண்மித்தே குறித்த வேலிகள் அமைக்கப்பட்டு வருகின்றது.

ஏற்கனவே குறித்த பகுதிக்கு அண் மையாக ஒரு பெண் தனது வீட் டினை அண்மித்த காணித்துண்டம் ஒன்றினை வேலியிட்டு அடைத்த போது கமநல அபிவிருத்தி திணைக் களத்தினர்.

ஜேசீபி இயந்திரத்துடன் சென்று குறி த்த வேலிகளை அகற்றியதுடன், அப் பெண்ணுக்கு எதிராக முறைப்பாடு செய்திருந்தமையும் குறிப்பிடத் தக்கது.



உள்நாட்டு செய்திகள் - வவுனியா

# ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் தலைமையில் வவுனியாவில் விசேட கூட்டம்



ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் பாலித்த ரங்கே பண்டார தலைமையில் வவுனியாவில் விசேட கூட்டம் ஒன்று நேற்று (06) இடம்பெற்றது.

வவுனியா, மில் வீதியில் உள்ள விருந்தினர் விடுதியில் இக் கலந் துரையாடல் இடம்பெற்றிருந்தது. இதன்போது கட்சியின் அடுத்த கட்ட திட்டங்கள் குறித்தும் மாவட்டமட்ட கட்டமைப்பை பலப்படுத் தல் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதுடன், தேர்தலை எதிர் கொள்ளும் வகையில் கட்சியை மாவட்ட மட்டத்தில் மறுசீரமைத்து மக்களுக்கான வேலைத்திட்டங்களை முன்னெடுத்தல் தொடர்பாக வும் ஆராயப்பட்டது.

இதில் ஐக்கிய தேசியக் கட்சியின் வவுனியா மாவட்ட உள்ளூராட்சி மன்ற வேட்பாளர்கள், கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாள ர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

உள்நாட்டு செய்திகள் - வவுனியா

## ஜனாதிபதியுடனான பேச்சு...

எதிர்வரும் 11, 12, மற்றும் 13ஆம் திகதிகளில் ஜனாதிபதியுடன் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையின் பொது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ள முடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்படலாம் என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 11ஆம் 12ஆம் 13ஆம் திகதிகளில் வடக்கிலுள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைத்துப் பேசவுள்ளதாகவும் அதில் வடக்கின் அபிவிருத்தி மற்றும் அதிகாரப்பரவலாக்கம் தொடர்பிலும் வடக்கில் இடம்பெறுகின்ற பிரச்சினைகள் மற்றும் அவற்றுக்கு தீர்வு எடுப்பதற்கான விடயங்கள் தொடர் பிலும் ஆராயப்படவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் வடக்கு, கிழக்கு எமது தாயக பூமி என்றும், எனவே, வடக்கு, கிழக்கு சார்ந்த அபிவிருத்தி, அதிகாரப்பரவலாக்கம், வடக்கு, கிழக்கிலிருக்கும் பிரச்சினைகளை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென வும் தனியாக வடக்கை மட்டும் உள்ளடக்க முடியாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பியுள்ளதாகவும் வடக்கு, கிழக்கு இணைந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாட வேண்டும் என்றும் அதன் அடிப்படையில், உரிய காலத்துக்கு முன் ஜனதிபதி அவரது கருத்தை மாற்ற வேண்டும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கல நாதன் குறிப்பிட்டுள்ளார்.

## சூடுபிடிக்கும் தையிட்டி விவ...

2021ஆம் ஆண்டே நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரனிடம் தமது காணிகளை இராணுவத்தினரிடம் இருந்து பெற்று தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என தையிட்டி விகாரையை சூழவுள்ள காணி உரிமையாளர்கள் கடிதம் மூலம் கோரி இருந்தனர்.

அந்த கடிதம் சமூக வலைத்தளங்களில் வெளியாகி இருந்ததுடன், கடிதம் கொடுத்தவர்களில் ஒருவரான பத்மநாதன் என்பவரும் ஊடகங்களுக்கு கடிதம் கொடுத்தமை தொடர்பில் கருத்து தெரிவித்து இருந்தார்

இந்நிலையில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி மற்றும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியை சேர்ந்தவர்கள் 2019 ஆம் ஆண்டு திகதியிடப்பட்டு நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமாருக்கு எழுதப்பட்ட கடிதம் என ஒன்றை சமூக வலைத்தளங்களில் பகிர்ந்து , அந்த கடிதம் எழுதப்பட்ட கால பகுதியில் கஜேந்திரகுமார் நாடாளுமன்ற உறுப்பினரே இல்லை.

ஒருவரின் தொலைபேசி இலக்கம் 11 இலக்கங்களை கொண்டுள்ளது. இருவரின் கையெழுத்து ஒரே மாதிரி இருக்கு என்று கூறி இந்த கடிதம் போலியானது என குறிப்பிட்டு , அந்த கடிதத்துடன், கஜேந்திரனுக்கு எழுதிய கடிதத்தையும் இணைத்து , அந்த கடிதம் போன்றே இந்த கடிதமும் போலி என நிறுவ முயசித்து வருகின்றனர்.

இந்நிலையில் ஊடகங்களுக்கு நேற்று முன் தினம் கருத்து தெரிவித்த ஆ. பத்தமநாதனை ஊடகவியலாளர்கள் நேற்றைய தினம் சந்தித்து கருத்து கேட்டபோது ,

தாங்கள் கடிதம் கொடுத்தது உண்மை எனவும் , விரும்பின் அந்த கடிதத்தின் கீழ் உள்ள ஏனையவர்களின் தொலைபேசி இலக்கங்கள் ஊடாக தொடர்பு கொண்டு கடிதம் கொடுத்ததன் உண்மை தன்மையை விளங்கி கொள்ளுங்கள் என தெரிவித்துள்ளார். தங்களின் அரசியலுக்காக எம்மை பொய்க்காரர் ஆக்குவது எமக்கு மிகுந்த மன வேதனையை ஈடுபடுத்தியுள்ளதாக மேலும் கவலையுடன் தெரிவித்தார்.

## இன முரண்பாடு பேரினவாத...

கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

மேலும் எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் அவர்கள் ஒரே கொள்கை ஒரே முகத்துடன் தான் ஆட்சியமைக்கிறார்கள். ஆகவே அதனை மாற்ற வேண்டும் என்பதற்காகவே தான் நான் சிறிலங்கா சுதந்திர கட்சியுடன் இணைந்து பயணிக்கிறேன் எனவும் தெரிவித்துள்ளார். ஊடகம் ஒன்றின் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதேவேளை தையிட்டியில் பெரும் சர்ச்சையாக பேசப்பட்டு வரும் பௌத்த விகாரை தொடர்பில் கேள்வியெழுப்பப்பட்டது. அதற்கு பதிலளிக்கையில், தையிட்டி விகாரை என்பது அத்துமீறி சட்ட விரோதமாக கட்டப்பட்ட ஒரு பௌத்த விகாரை தான்.

இது அரசாங்கத்தின் காணியும் அல்ல, தனியாருடையது, பொதுமக்களின் காணிகள் 29 பேருடைய காணியை ஆக்கிரமித்தே இந்த விகாரை கட்டப்பட்டுள்ளது.

தற்போது உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் இந்த காணிகள் இருப்பதானாலேயே இவ்வாறு அத்துமீறி சட்டத்திற்கு புறம்பாக விகாரை அமைக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் உயர் பாதுகாப்பு வலயம் என அறிவிக்கப்பட்டுள்ள இடத்தில் பாதுகாப்பு தொடர்பான விடயங்களை மட்டுமே மேற்கொள்ள வேண்டும் அதனைத் தாண்டி இன,மத முறுகலை ஏற்படுத்தும் வகையில் செயற்பட முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

## தொடரும் சிங்களத்தின்...

இது தொடர்பாக கண்காணித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் கூறியிருந்தேன் கடந்த ஒருவருடமாக இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுவருகிறது. பிரதேச சபையால் எவ்வித நடவடிக்கை எடுக்கப்படாது இருந்துள்ளது.

தற்போது தையிட்டி விகாரை தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிணைந்து செயற்படுகிறார்கள் அதேபோல் வசாவிளான் பகுதியில் அமைக்கப்படுகின்ற இராணுவ வைத்தியசாலை தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

வலிவடக்கு பிரதேசத்தை பொறுத்தவரையில் உயர்பாதுகாப்பு வலயமாக இருந்து சிறிது சிறிதாக விடுவிக்கப்படும் பகுதியாகவே காணப்படுகிறது. தற்போதும் பல பிரதேசங்கள் விடுவிக்கப்படாமல் உள்ளது விடுக்கப்படும் என கூறப்பட்டுவந்தாலும் அது நடந்தபாடாக இல்லை.

எனவே இனியாவது காணிகளை விடுவிக்கின்ற நடவடிக்கைகள் மற்றும் அனுமதியின்றியும் பொதுமக்களின் காணிகளில் கட்டப்பட்டு வருகின்ற அனைத்து வேலைத்திட்டங்களையும் நிறுத்துவதற்கு அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும்

ஒன்றிணைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

## மக்களை ஏமாற்றும் அரசிய...

கொண்டு உரையாற்றும்போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் உரையாற்றிய அவர், “அண்மையில் மிகப்பெரிய ஒரு கதவடைப்பு போராட்டத்தினை வடக்கு கிழக்கு தழுவிய ரீதியில் நடாத்தினோம் அது பாரிய போராட்டமாக தமிழ் முஸ்லிம் மக்கள் ஒன்றிணைந்து புலம்பெயர் தேசத்தில் உள்ளவர்களின் ஆதரவோடு முதற்தடவையாக இங்கு நடாத்திக் காட்டி இருந்தோம்.

நான் நேரடியாகவே கூறுகின்றேன் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் அந்த கர்த்தாலை தமிழ் மக்கள் ஒட்டுமொத்தமாக நடாத்திய கர்த்தாலை எள்ளி நகையாடினார்கள்.

தமிழ் மக்களின் உணர்வினை எள்ளி நகையாடினார்கள் அதனுடைய விளைவு இன்று தெரிகிறது.

தமிழ் மக்களின் உணர்வுகளை எள்ளி நகையாடியவர்கள் இன்று தையிட்டியில் விகாரை கட்டி முடிந்து கலசம் வைத்த பின் விகாரையினை இடித்து விட போகின்றோம் என தமிழ் மக்களை ஏமாற்றும் அரசியலில் ஈடுபட்டுள்ளார்கள்.

ஏன் இந்த கர்த்தாலை நடாத்தினோம் என்றால் அண்மையில் நாவற்குழி ஜம்புகோல பட்டணம் குருந்தூர் மலையில் விகாரைகள் புதிதாக உருவாக்கப்பட்டன அத்தோடு கலாச்சார சின்னங்கள் அழித்தொழிக்கப்படுகின்றன ஒட்டுமொத்தமான தமிழ் மக்களின் இருப்பு அழித்தொழிக்கப்படுவதற்கு எதிராக எமது கண்டனத்தினை தென்னிலங்கைக்கு பதிவு செய்வதற்குமாக சர்வதேச அரங்கிற்கும் வெளிப்படுத்துவதற்குமாக நாங்கள் ஒட்டுமொத்தமாக ஆரம்ப கட்டமாக அனைத்து தமிழ் தேசிய கட்சிகளும் இணைந்து ஒரு கர்த்தாலுக்கு அழைப்பு விடுத்திருந்தோம் அது பரிபூரண வெற்றியாக அமைந்திருந்தது.

அதனை எள்ளி நகையாடி அந்த கர்த்தாலுக்கு அவதூறுகளை பரப்பிக் கொண்டிருந்தவர்கள் இன்று தையிட்டியிலே கட்டி முடித்து கலசம் வைக்கப்பட்டிருக்கும் விகாரையினை அகற்றுவற்கு நாங்கள் போராடுகின்றோம் என மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கின்றார்கள்.

நாளை சாவகச்சேரியில் நெடுங்கேணியில் விகாரை வரும் எல்லா இடங்களிலும் வரும் இவ்வாறு தனித்தனியே போராட போகின்றோமா அல்லது மக்களை ஒரு தேசமாக ஒருங்கிணைத்து இவற்றைத் தடுத்து நிறுத்த போகின்றோமா என்பதுதான் எமது கேள்வி.

அதற்காகத்தான் நாங்கள் அனைத்து தமிழ் தேசிய கட்சிகளும் புலம்பெயர் அமைப்புகளும் ஒன்று சேர்ந்து கர்த்தாலை ஏற்பாடு செய்திருந்தோம்.

அதற்கு எதிர்ப்பு தெரிவித்தவர்கள் இன்று தமிழ் மக்களை ஏமாற்றுகின்ற அரசியல் போராட்டத்தினை தையிட்டியில் நடாத்திக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழ் மக்கள் குறிப்பாக யாழ்ப்பாண தமிழ் மக்கள் இவ்வாறான ஏமாற்று அரசியல் செய்பவர்களை முற்று முழுதாக நிராகரிக்க வேண்டும்.

சரியான தலைமையினை தெரிவு செய்ய வேண்டும், தமிழ் மக்களின் எதிர்காலத்தை பாதுகாக்கக்கூடிய தலைவர்களை அடையாளம் காண வேண்டும்.

மக்களை ஏமாற்றும் அரசியலில் ஈடுபடுவோருக்கு விரைவில் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்” - என்றார்.

## யாழ். கந்தரோடையில் புதி...

இடம்பெறவுள்ளது. சிங்கள பௌத்த பேரினாவாத அரசின் பூரண அனுசரணையுடன் தமிழ்த் தேசத்தின் இருப்பை அழித்து வரலாற்றைத் திரிபுபடுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்படும்.

கட்டமைக்கப்பட்ட மரபுரிமைசார் இனவழிப்பு செயற்பாடிற்கு எதிரான இப் போராட்டத்திற்கு தமிழர் வாழ்வுரிமை மையம் மற்றும் கந்தரோடை சிவில் சமூக செயற்பாட்டாளர்களுடன் இணைந்து

தமிழ்த் தேசியப் பேரவை முன்னெடுக்கும் இப்போராட்டத்திற்கு தமிழ்த் தேசிய உணர்வாளர்களை கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## வடக்குக்கிழக்கைத் தனித்தனி...

13ஆம் திகதிகளில் வடக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்திப்பதற்கான அழைப்பையும் விடுத்திருக்கிறார். வடக்குக்கிழக்கைத் தனித்தனியாகக் கையாளும் ரணிலின் இந்தத் தந்திரத்துக்கு எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலியாக வேண்டாம் என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜனாதிபதி இனப்பிரச்சினைக்கான தீர்வு பற்றிப் பேசுவதற்கு விடுத்திருக்கும் அழைப்புத் தொடர்பாக பொ. ஐங்கரநேசன் வெளியிட்டுள்ள ஊடகஅறிக்கையிலேயே இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், ஜனாதிபதி விடுக்கும் அழைப்பு ஒன்றைத் தமிழர்தரப்பு நிராகரிக்க முடியாது. அவர் தீவிர சிங்கள-பௌத்த மேலாதிக்க நிலைப்பாடு உடையவராக இருப்பினுங்கூட நாட்டின் தலைவர் என்ற ரீதியில் இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கு அவருடன் பேசியே ஆக வேண்டும். ஆனால், தனித்தனிக்கட்சிகளாக அல்லாது அனைத்துத் தமிழ்த்தேசியக் கட்சிகளின் நிலைப்பாடுகளையும் உள்வாங்கி ஒருமித்த தமிழ்த்தேசியத்தின் குரலாகப் பேச்சுவார்த்தை மேடையில் அமருதல் வேண்டும். அப்போதே பேச்சுவார்த்தையை வலுவுடன் எதிர்கொள்ளமுடியும்.

தமிழ் மக்களின் இனப்பிரச்சினையை வடக்குக்கான பிரச்சினையாகத் தென்னிலங்கை உருவகித்து வருகிறது. கிழக்கு மாகாணத்தில் திட்டமிடப்பட்ட குடியேற்றங்களினால் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பிரதிநிதித்துவம் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது. இவர்களிலும் அரச ஆதரவு நிலைபாடு உடையவர்களே அதிகம். இந்நிலையில் பேச்சுவார்த்தை மேடையில் வடக்கும் கிழக்கும் தனித்தனியாகப் பங்கேற்பது தமிழ்த்தேசியத்தின் குரலைப் பலவீனப்படுத்துவதாகவே அமையும்.

ரணில் விக்கிரமசிங்க தந்திரமான அரசியல் நகர்வுகளுக்கு மிகவும் பிரசித்தமானவர். நல்லாட்சிக் காலாத்தில் அவர் ஆரம்பித்த தீர்வுத் திட்டம் பிசுபிசுத்துப்போனதையும் நாடறியும். அவரது தற்போதைய பேச்சுவார்த்தைக்கான அழைப்பின் பின்னால் இருக்கக்கூடிய அபாயங்களைத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புப் புரிந்து கொள்ளவேண்டும்.

தமிழர் தரப்பில் தாமே பெரும்பாண்மை என்ற இறுமாப்பைப் புறந்தள்ளி, ஏனைய தமிழ்த்தேசியக் கட்சிகளின் கருத்துகளையும் உள்வாங்கித் தனது சந்திப்பின்போது பிரதிபலிக்க வேண்டும்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தனது சந்திப்பில் ஜனாதிபதி வடக்குக்கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தனியாகச் சந்திக்கும் அழைப்பை அடியோடு நிராகரிக்க வேண்டும். வடக்குக்கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் ஒன்றாகச் சந்திப்பதற்கான கோரிக்கையை அழுத்தமாக முன்வைக்க வேண்டும். தவறின், ரணில் விக்கிரமசிங்கவின் தந்திரத்துக்கு முன்னால் மீண்டும் தோற்றவர்களாகிவிடுவோம். மீண்டும் மீண்டும் தவறிழைத்த தரப்பாகவே தமிழர்கள் இருந்ததாக வரலாறும் பதிவுசெய்ய நேரிடும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## வவுனியாவில் சிறி சபாரத்தினத்தின் 37வது நினைவேந்தல் நிகழ்வு!








தமிழ் ஈழ விடுதலை இயக்கமான ரெலோ அமைப்பின் முன்னாள் தலைவர் சிறி சபாரத்தினத்தின் 37வது நினைவேந்தல் நிகழ்வு நேற்று (06.05.2023) வவுனியாவில் இடம் பெற்றது.

தமிழ் ஈழ விடுதலை இயக்கமான ரெலோ அமைப்பின் வவுனியா அலுவலகத்தில் காலை 10 மணியளவில் இடம்பெற்ற இந்த நினைவேந்தல் நிகழ்வின் போது ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு சிறி சபாரத்தினத்தின் உருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

குறித்த நினைவேந்தல் நிகழ்வில் ரெலோ கட்சியின் முக்கிய உறுப்பினர்கள், கட்சியின் ஆதரவாளர்கள் என பலரும் அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டனர். இதன் போது தலைவர் சிறி சபாரத்தினம் மற்றும் உயிர் நீத்த போராளிகள் பொதுமக்களை நினைவு கூர்ந்து சுடர் ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது.

உள்நாட்டு செய்திகள் - வவுனியா

## யாழில். சிறி சபாரத்தினத்தின் 37வது நினைவேந்தல் நிகழ்வு!





தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) தலைவர் சிறிசபாரத்தினம் அவர்களின் 37 ஆவது நினைவு தினம் அவர் மரணித்த இடமான யாழ்ப்பாணம் உரும்பிராய் அன்னங்கை எனும் இடத்தில் நேற்று காலை நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் ரெலோ அமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினரும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோவிந்தன் கருணாகரம், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் மற்றும் டெலோவின் ஆதரவாளர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

உள்நாட்டு செய்திகள் - யாழ்ப்பாணம்



## வெடுக்குநாறிமலை ஆதி சிவன் ஆலயத்திற்கு நா.உ. சரத் வீரசேகர தலைமையிலான குழுவினர் விஜயம்!

வவுனியா வெடுக்குநாறிமலை ஆதி சிவன் ஆலயத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தலைமையிலான குழுவினர் நேற்று (06) விஜயம் செய்துள்ளனர்.

வடக்கு, ஒலுமடு ஆதி சிவன் ஆலயத்தில் உடைக்கப்பட்ட விக்கிரகங்களை மீள பிரதிஸ்டை செய்ய வவுனியா நீதிமன்றம் அனுமதி வழங்கியிருந்த நிலையில், கடந்த 28 ஆம் திகதி ஆலயத்தில் விக்கிரகங்கள் பிரதிஸ்டை செய்யப்பட்டு விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றிருந்தன.

இந்நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தலைமையிலான குழுவினர் விஜயம் செய்து வெடுக்குநாறிமலை ஆதி சிவன் ஆலயத்தையும், அதன் சூழவுள்ள பகுதிகளையும் பார்வையிட்டுள்ளனர்.

இதன்போது, நெடுங்கேணி பொலிசார் மற்றும் சிங்கள மக்களும் உடன் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

உள்நாட்டு செய்திகள் - வவுனியா

## தமிழர் பிரதேசத்திலிருந்து இருந்து 10 பேர் அகதிகளாக தமிழகத்தில் தஞ்சம்...!

இலங்கையில் இருந்து நேற்று (06) அதிகாலை படகு வழியாக 10 பேர் தமிழகத்தில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

மன்னாரில் இருந்து படகு மூலம் புறப்பட்டவர்களே இவ்வாறு தமிழகத்தின் இராமேஸ்வரத்தை அண்டிய மணல் தீடையில் இறக்கி விடப்பட்டுள்ளனர்.

இலங்கை இந்தியா இடையே உள்ள திட்டியில் இந்தியாவின் ஆளுகையில் உள்ள 3வது மணல் தீடையில் இவ்வாறு அகதிகளாகச் சென்றவர்கள் இறக்கி விடப்பட்டுள்ளனர்.


இந்நிலையில் அவர்களை மரைன் போலீசார் மீட்டு மண்டபம் காவல் நிலையத்திற்கு கொண்டு சென்று பின்னர் அகதிகள் மறுவாழ்வு முகாமில் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.





உள்நாட்டு செய்திகள் - வவுனியா

## வல்வெட்டித்துறை இந்திரவிழா கொண்டாட்டம் வானில் பறக்கவிடப்பட்ட புகைக் குண்டு வீட்டின் மேல் விழுந்தது



யாழ் - வல்வெட்டித்துறை முத்துமாரியம்மன் ஆலய இந்திரவிழா கொண்டாட்டத்தில் வானில் பறக்கவிடப்பட்ட புகைக்குண்டு ஒன்று வீடு ஒன்றின் மீது விழுந்துள்ளது. நேற்று முன்தினம் இரவு ஆலய வளாகத்தில் வைத்து பறக்க விடப்பட்ட புகைக் குண்டு பருத்தித்துறை - தும்பளை பகுதியில் உள்ள வீடு ஒன்றின் மீது விழுந்துள்ளது. குறித்த புகைக்குண்டு வீட்டின் மேற்தட்டில் எரிந்த நிலையில் விழுந்துள்ளது.

உள்நாட்டு செய்திகள் - யாழ்ப்பாணம்

## அளம்பில் மாவீரர் துயிலும் இல்லக் காணியை விடுவிக்க கோரிக்கை! இல்லையேல் சாகும்வரை உணவுத்தவிர்ப்பு போராட்டம்



அளம்பில் மாவீரர் துயிலும் இல்லக் காணியை இராணுவத்திடமிருந்து விடுவிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ள மூன்று பெற்றோர்கள், இது தொடர்பாக அரசியல் தலைமைகள், அதிகாரிகள் மிக விரைவில் தமக்கான உரிய தீர்வை பெற்றுத்தருமாறு கோரியுள்ளனர்.
தவறும் பட்சத்தில் தாம் சாகும் வரை உணவுத் தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபடப் போவதாகவும் மூன்று பெற்றோர்கள் அறிவித்துள்ளனர்.

தமது உறவுகளை அளம்பில் மாவீரர் துயிலும் இல்ல வளாகத்தில் விதைத்த தந்தை ஒருவரும், இரண்டு தாய்மார்களும் இது தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள அளம்பில் மாவீரர் துயிலும் இல்ல காணிக்கு அருகில் இருக்கின்ற 23 ஆவது சிங்க ரெஜிமென்ட் இராணுவத்தினர் தமது பிள்ளைகளின் உடலங்கள் விதைக்கப்பட்ட இடத்தில் விவசாய செய்கையில் ஈடுபடுவதோடு கிரிக்கெட் விளையாடுவதும், உணவகம் நடத்துவதுமாக உள்ளனர். இவர்களை குறித்த காணியை விட்டு வெளியேற்றி தமது பிள்ளைகளை நிம்மதியாக அஞ்சலிக்க ஏற்பாடு செய்து தருமாறு குறித்த பெற்றோர் கோரியுள்ளனர்.

“இவர்கள் தமது உறவுகளை அஞ்சலிக்க வழியில்லாமல் பல்வேறு மன அழுத்தங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருவதாகவும் இது தொடர்பாக அனைத்து அரசியல் பிரமுகர்கள் மற்றும் அரச அதிகாரிகள் இணைந்து தமது பிள்ளைகளை அஞ்சலிக்க குறித்த காணியை இராணுவத்திடம் இருந்து மீட்டு தருமாறும் தவறும் பட்சத்தில் குறித்த காணியை மீட்க சாகும்வரை உண்ணா விரதத்தில் ஈடுபட்டு குறித்த காணியை மீட்கவுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

உள்நாட்டு செய்திகள் - முல்லைத்தீவு



# போராட்ட வரலாற்றில் மே 06

பார்த்தசாரதி

நேற்று மே மாதம் 6ம் திகதி. மறைந்த ரெலோ தலைவர் சிறிசபாரத்தினத்தின் 37 வது நினைவு தினம், அவர் தலைமை தாங்கிய ரெலோ இயக்கத்தினால் அனுஷ்டிக்கப்பட்டது.

1986 மே 6ம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ரெலோ தலைவர் சிறி சபாரத்தினத்தை சுட்டுக் கொன்றது என்பதும். அந்த படுகொலைக்கு முந்திய 7 நாட்களில்- ஏப்ரில் 29 ல் இருந்து மே 5 வரையிலான காலத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட ரெலோ போராளிகள் யாழ்ப்பாணம் உட்பட தமிழ் மாநிலத்தின் பல்வேறு இடங்களில் விடுதலைப் புலிகள் இயக்கத்தால் வேட்டையாடப்பட்டனர் என்பதும். எமது தேசிய போராட்ட வரலாற்றில் மறக்க முடியாத நிகழ்வுகளாகும்.

சுதந்திர தமிழீழத்துக்கான ஆயுதப் போராட்டம் உத்வேகத்துடன் உலகத்தின் கவனத்தை ஈர்க்க தொடங்கியிருந்த காலப்பகுதியில் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் ரெலோ இயக்கத்துக்கும் இடையில் 1986 ஏப்ரல் 29 ம் திகதி ஆயுத மோதல் வெடித்தது.

நூற்றுக்கும் மேற்பட்ட ரெலோ போராளிகளும் புலிகள் இயக்கத்தின் சில போராளிகளும் உயிரிழந்தார்கள்.

மே 6ம் திகதி ரெலோ தலைவரின் மரணத்தோடு, மோதல் முடிவுக்கு வந்தது.

அந்த மோதலுக்கான வரலாற்றுப் பின்னணி என்ன?

சிறிமாவோ பண்டாரநாயக்கா ஆட்சிக் காலத்தில், 1970களின் ஆரம்பத்தில், அடக்குமுறைச் சூழலில் துளிர்விட்டிருந்த தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டம், அடுத்து ஆட்சிபீடம் ஏறிய ஜெ.ஆர். ஜெயவர்த்தன அரசாங்கத்தின் ஆரம்ப நாட்களில் இருந்து படிப்படியாக வளர்ச்சி அடைய தொடங்கியது.

தமிழ் இனத்தின் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட அரச பயங்கரவாதம், அந்த வளர்ச்சிக்கு தீவிரமானதோர் திடீர் எழுச்சியைக் கொடுத்தது.

அரச பயங்கரவாதத்திற்கு எதிராக, ஆயுதம் ஏந்திப் போராட முன்வந்த பல்லாயிரம் தமிழ் இளைஞர்கள், பல்வேறு விடுதலை இயக்கங்களிலும் இணைந்து கொண்டார்கள்.

பெரிதும் சிறிதுமாக கிட்டத்தட்ட 26 இயக்கங்கள் அக்காலத்தில் களத்தில் இருந்தன.

காலப்போக்கில் ஒரு சில இயக்கங்கள் மெதுவாக அடங்கிப்போய்விட அல்லது அடக்கிவாசிக்க, ஐந்து இயக்கங்கள் போராட்ட களத்தில் முன்னணியில் நின்றன.

ரெலோ, புளொட் தமிழீழ விடுதைபுலிகள், ஈபி.ஆர்.எல்.எப் மற்றும் ஈரோஸ் என்பனதான் அவை!

அவற்றில் ஈரோஸ் தவிர, ஏனைய நான்கு இயக்கங்களும் "பெரிய" இயக்கங்களாக கருதப்பட்டன.

தமது இராணுவ வலிமையை நிரூபிப்பதில், ஒருவித போட்டி மனப்பான்மை இந்த இயக்கங்களுக்கு இடையே இருந்த போதிலும், தமது எதிரியான சிறிலங்கா அரசின் படைகளை எதிர்ப்பதில் ஒற்றுமை நிலவியது.

தமிழ் மாநிலத்தில், குறிப்பாக வடக்கில், சிறப்பாக யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் அரச படைகள் பெரும்பாலும் முகாம்களுக்குள் முடக்கப்பட்டிருந்தன.

இது தான் 1986 ஏப்றில் மாதம் 29 ம் திகதி ரெலோ இயக்கத்திற்கும் விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கும் இடையில் மோதல் வெடித்த வேளையில் இருந்த கள நிலைமை.

இந்த பின்புலத்தில் தான், 1986 ஏப்றில்- 29 மே 6 நாட்களில் ரெலோ தலைவர் உட்பட சுமார் நூறு போராளிகள் படுகொலை செய்யப்பட்டனர்.

ரெலோவின் இராணுவ வீழ்சியைச் தொடர்ந்து, புளொட் மற்றும் ஈபி.ஆர்.எல். எப் அடுத்தடுத்து தாக்கப்பட்டன.

இந்த இரண்டு இயக்கங்களும் வலுவிழந்து முடங்கிப்போயின அதனைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளின் மேலாண்மையை ஈரோஸ் இயக்கம் ஏற்றுக் கொண்டு, அனுசரணையாக இயங்கியது.

தமிழீழ விடுதலைப் போராட்டக் களத்தின் வரைபடமே முற்றாக மாறியது.

1987 யூலை இலங்கை இந்திய ஒப்பந்தம் ஏற்படுவதற்கும், அதன் அடிப்படையில் இந்திய அமைதிகாக்கும் படை வந்து இறங்குவதற்கும். தொடர்ந்து, இரண்டு மாதங்கள் முடிந்த கையோடு, விடுதலைப் புலிகளும் இந்தியப் படையும் மோதிக்கொள்வதற்கும், சங்கிலி தொடராக அமைந்த மேற்குறிப்பிட்ட சம்பவங்கள், ஒட்டு மொத்தமான அடிப்படையை அமைத்துக் கொடுத்தன.

ஆனால், அந்த அடிப்படை அமைவதற்கான "பிள்ளையார்" சுழியை ரெலோ- விடுதலைப் புலிகள் மோதலே போட்டிருந்தது என்பதே, பின்நோக்கி ஆராய்கையில் பிரகாசமாக தெரிகின்ற உண்மை!

37 ஆண்டுகளுக்கு முன்னர், போராட்டத்தின் நடுவில் தமிழர் தேசத்தின் ஒற்றுமை உடையத் தொடங்கியது, உண்மையில் ஒரு சாபக்கேடு என்றுதான் சொல்ல வேண்டும்.

பின்னர், 15 ஆண்டுகள் கழித்து, 2001ல் தமிழ்த் தேசத்தின் பரந்துபட்ட ஒற்றுமை விடுதலைப் புலிகளின் தலைமையின் கீழ் எழுச்சியோடு நிலைநாட்டப்பட்டது. அது ஓர் மாபெரும் வரலாற்றுத் திருப்புமுனை!

சிறிலங்கா அரசு விரித்த சதிவலைக்குள் தளபதி கருணா சிக்கிக் கொண்ட நிலையிலும் கூட, 2004 தேர்தலில் மாபெரும் அரசியல் பலமாக, தமிழ்த் தேசத்தின் ஒற்றுமை மீண்டும் நிலை நிறுத்தப்பட்டது.

ஆயினும் என்ன!

2001 செப்டம்பர் 11 ல் அமெரிக்காவில் நிகழ்த்தப்பட்ட அல்ஹைடா தாக்குதலின் விளைவாக. பயங்கரவாதம் தொடர்பில் பாரிய மாற்றம் அடைந்த சர்வதேசத்தின் பார்வை, அதனை நூணுக்கமாக கணிப்பிடத் தவறிய தமிழர் தரப்பின் தவறு, ராஜிவ்காந்தி படுகொலையின் இந்திய அதிர்வலைகள் என்பனவற்றோடு, விடுதலைப்புலிகள் இயக்கத்தில் கருணாவின் பிரிவினால் உருவான இராணுவ பலமிழப்பும் இணைந்ததன் விளைவாக, முள்ளிவாய்க்காலில் தமிழ்த் தேசத்தின் ஆயுத வழியிலான விடுதலைப் போராட்டத்திற்கு கொள்ளி வைக்கப்பட்டது.

முள்ளிவாய்க்கால் உட்பட, முடிந்து போன 37 வருட காலத்தில் அரங்கேறிய அழிவுகள், கூஷ நடுவிலும் தமிழர் தேசம் விடிவுக்காக ஏங்கி நிற்கின்றது.

அடங்க மறுக்கும் தமிழ் இனத்தின் சுதந்திர வேட்கை, தந்திர வாதிகளான சுயநல தமிழ் அரசியல் வாதிகளால், அவர்களின் தனிப்பட்ட அரசியல் நலன்களுக்கும், சொந்த அபிலாசைகளுக்கும் தொடர்ந்து பயன்படுத்தப்படுகின்றது.

போராட்ட களத்தில் வீழ்ந்து, ஒவ்வொரு மே 6ம் திகதியும் நினைவு கூரப்படும் ரெலோ



தலைவர் சிறி சபாரத்தினமும் அவரின் தோழர்களும் சரி, அவர்களுக்கு முன்னரே தியாகி சிவகுமாரனில் ஆரம்பித்து, 1983 வெலிக்கடை படு கொலைகளின் தியாகிகளாக உயர்ந்த தங்கத்துரை, குட்டிமணி, ஜெகன் போன்றோர் வரையிலான போராளிகளும் சரி, தொடர்ந்து முள்ளிவாய்க்கால் வரையிலும் களத்தில் பலியான பல்லாயிரம் மாவீரர்களும் சரி, அனைவருமே, ஒட்டு மொத்தமாக ஒவ்வொரு ஆண்டின் அனைத்து நாட்களையும் அனுஷ்டிக்க வேண்டிய நினைவு நாட்களாக ஆக்கி விட்டே வரலாற்றில் நிலைத்து நிற்கின்றனர்.

தமிழர் தேசத்தின் விடுதலையை நேசிப்பதாக கூறும் நடிப்பு அரசியல் போராளிகள் எப்படியாவது இருந்து விட்டு போகட்டும். ஆனால், விடுதலையை உண்மையாக நேசிக்கும் ஒவ்வொரு தமிழ் ஜீவனும் இந்த தியாக தீபங்களை ஒருபோதும் மறக்கக் கூடாது.